செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 414 நாள் : 14/7/17

ந.க.வ. TACTV/058/2017
நாள் : 12-07-2017

செய்தி மக்கள் தொடர்புத் துறை.
வேலூர் மாவட்டம்

## பத்திரிகை செய்தி

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி. நிறுவனம் மூலமாக தற்போது தமிழகத்தில் 486 அரசு இ-சேவை மையங்களை அமைத்து பொது மக்களுக்கு சேவையாற்றி வருகிறது. வேலூர் மாவட்டத்தில் உள்ள 13 வட்டங்களிலும் அரசு இ-சேவை மையங்கள் அமைக்கப்பட்டு சேவையாற்றி வருகின்றன. பொது மக்களுக்கு அரசின் சேவைகளை அரசு இ-சேவை மையங்கள் மூலம் நேர்த்தியாகவும் வெளிப்படையாகவும் அவர்களது இருப்பிடத்திற்கு அருகிலேயே அளிப்பதே தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்த சேவை மையங்கள் மூலம் குடும்பத்தில் பட்டதாரி இல்லை என்பதற்கான சான்று, கணவரால் கைவிடப்பட்டோருக்கான சான்று, வருமானச் சான்று, சாதிச்சான்று, இருப்பிடச்சான்று, முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்பு திருமண உதவித் திட்டம், ஈ.வேரா மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண உதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண உதவித் திட்டம், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம் ஆகிய மின் ஆளுமை அரசு சேவைகள் வழங்கப்படுகிறது. மேலும் இந்த பொது சேவை மையங்கள் மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மின்கட்டணத்தைச் செலுத்தும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் பிளாஸ்டிக் ஆதார் அட்டை, வண்ண வாக்காளர் அடையாள அட்டை மற்றும் குடும்ப அட்டை (Smart Card) பெறும் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டும், பொது மக்கள் அதிக அளவில் பயன்பெறும் வகையிலும் தற்பொழுது வேலூர் மாவட்டத்தில் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாநகராட்சி அலுவலகம் மற்றும் நான்கு மண்டல அலுவலகங்களிலும் (தாராபடவேடு, சத்துவாச்சாரி, வேலூர் மற்றும் கொணவட்டம்) 01-04-2017 முதலும் அனைத்து நகராட்சி அலுவலகங்களில் (இராணிப்பேட்டை, ஆற்காடு, மேல்விஷாரம், பேர்ணாம்பட்டு, குடியாத்தம், வாணியம்பாடி, ஆம்பூர் மற்றும் ஜோலார்பேட்டை) 08-05-2017 முதலும் புதியதாக அரசு இ-சேவை மையங்கள் துவக்கப்பட்டு பொது மக்களுக்கு சேவையாற்றி வருகிறது. தங்கள் பகுதிக்கு அருகில் உள்ள அரசு இ-சேவை மையங்களைப் பயன்படுத்தி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஓம்- சி. அ. ராமன்,
மாவட்ட ஆட்சியர்,
வேலூர் மாவட்டம்.

/உத்திரவுப்படி/

14/7/17
செ.ம.தொ.அ. ...
வேலூர் - 9.

14/7/17
மாவட்ட ஆட்சியருக்காக.

14.07.17